ஆண்டுக்குள்ளேயே அந்தப் பணி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியை மாநகராட்சியாக உயர்த்துவதற்குத் தனியாக மாநகராட்சியினுடைய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அந்த அடிப்படையிலேதான் இந்தப் புதிய மாநகராட்சிகள் சட்டம் மாநில சட்டத் திருத்தங்கள், 74-வது--அதாவது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நகர்பாலிகா திருத்தச் சட்டத்திலேயே 74-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி கொண்டு வரப்படும். மாநில சட்டங்கள் திருத்தங்களுடன் சேர்த்து ஒப்புதல் பெறப்படும். அதன்பின்பு சேலம் மாநகராட்சியாக அறிவிக்கை வெளியிடப்படும்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 197, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

197--

மனக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

***13317-திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம், மனக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அரசு உத்தரவிட்டும் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகை-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம், மனக்குடி வையாபுரியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் 1992-93-ம் ஆண்டில் எல்லா மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுவிட்டது. 1991-92-ம் ஆண்டில், ஆதிதிராவிட மாணவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட கல்வி உதவித் தொகையான ரூ. 5,270-ம் 18.3.1993-ல் வழங்கப்பட்டு விட்டது.

1994 ஏப்ரல் 5]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆறு ஆதிதிராவிட மாணவர்களுக்கும், நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மனக்குடி மேல்நிலைப்பள்ளியில் வழங்காமல் இருந்தபொழுது இந்தக் கேள்வியை நான் போட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்கி விட்டதாகத் தன்னுடைய பதிலுரையிலே சொல்லியிருக்கிறார்கள். நன்றி. இதுபோன்று காலதாமதம் இல்லாமல் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிக்கக்கூடியவர்களுக்கு உடனடியாக அந்த நிதிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆறு மாணவர்களுக்கும் வயது 18 வயதுக்கு மேற்பட்டுவிட்டது என்ற காரணத்தினால் நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் தமிழக அரசு வயது வரம்பை நீக்கிய விவரம் தெரியாமல் அந்த நடவடிக்கையைத் தாமதப்படுத்தியிருக்கிறார்கள். அதன்பிறகு நமது ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி அந்த ஆறு மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டு இருக்கிறது. இதுபோன்ற காலதாமதம் இனிமேல் ஏற்படாது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 198, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

198–

சிறுவந்தாடி கிராமத்தில் ஆதிதிராவிடர் நல விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்

***21244-திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம் வட்டம், சிறுவந்தாடு கிராமத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் நல விடுதிக்கு நிலம் கையகப்படுத்தி கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் வட்டம், சிறுவந்தாடு கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி தாட்கோவினால் கட்டிடம் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.